
# அதிகமாய் பிரயாசப்பட்டேன்




**நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல. ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது.** (1 **கொ** 15:9,10)

மேற்கண்ட வசனங்களில் பவுல் தன்னுடைய ஊழிய பாரத்தை குறித்து கூறுகிறார். அவர் மேற்கூறியபடி அப்போஸ்தலரெல்லாரிலும் பவுல் சிறியவராயிருந்தாலும், தேவனுக்காக அவருடைய ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் பிரயாசப்பட்டதினால், ஆண்டவரோடு மூன்றரை வருடம் உடன் இருந்த அப்போஸ்தலர்களை காட்டிலும் பவுலின் மூலமாய் தேவ வல்லமை அதிகமாய் வெளிப்பட்டது. இதற்கு வெளிப்படையான சான்று வேதத்தில் உள்ள பவுலின் நிருபங்களே ஆகும். அப்போஸ்தலர்களில் பிரதானமானவரான பேதுருவே **"எல்லா நிருபங்களிலும் இவைகளைக்குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற**

**வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.“ (2 பேதுரு 3:16)** என்று பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ சத்தியங்களை குறித்து ஆச்சரியப்படுகிறார்.

அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் சபையை துன்ப படுத்த, பாழாக்க மிகுந்த பிரயாசத்தோடு செயல்பட்ட சவுலாகிய பவுல், **“அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள். சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்.“ (அப் 8:1-3)**, பின்பு அதே சபையை வளர்தெடுக்கும் தகப்பனாய் மாறினார் **“கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்.“ (1 கொ 4:15).**

பவுல் இதை சாட்சியாக **கலா 1:23,24** வசனங்களில் கூறியுள்ளார், **“முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து, என்னைப்பற்றித் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.“**, இன்னும் தான் எவ்விதமாய் பிரயாசப்பட்டேன் என்பதை பவுலே பின்வரும் வசனங்களில் கூறுகிறார், **“அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்;**

**பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.“** (2 **கொ** 11:23-28).

ஒருவேளை பவுல் பதினோராம் மணிநேரத்தில் வேலை அமர்த்த பட்டவர்கள் போல மற்ற அப்போஸ்தலர்களுக்கு பின்பு ஊழியத்திற்கு வந்திருந்தாலும், தேவனுக்காக அவர்பட்ட பிரயாசம், மற்றவர்களை காட்டிலும் நிறைவான, மேன்னையான ஒரு ஊழியத்தை செய்யும்படியாய் அவரை ஏவியது. இப்படிப்பட்டவர்களையே தேவன் இன்றும் தேடுகிறார். தேவன் பவுலை அழைத்தபொழுது, அவர் தன்னுடையதெல்லாவற்றையும் தேவனுக்காக அர்பணித்து (கல்வி, செல்வம், பெலன்), சுவிசேஷத்திற்காக பிரயாசப்பட்டார்.

இன்றும் எத்தனையோ முகம் அறியாத தேவ பிள்ளைகள், சிறிய அளவில், ஒரு கூட்ட மக்களுக்கு என்று ஊழியம் செய்தாலும், மிகுந்த பிரயாசத்தோடு அதனை செய்கின்றனர். நாம் தேவனுக்காக செய்யும் / சாதிக்கும் காரியங்களை காட்டிலும், நமது இருதயத்தில் அவரை பற்றிய வாஞ்சை, அவருக்காய் வாழ வேண்டும் என்கிற பிரயாசம் எவ்வளவாய் இருக்கிறது என்பதையே தேவன் காண்கிறார். ஒருவேளை ஊழிய பாதையில் ஏற்ற தாழ்வுகள் வந்தாலும், அவருக்காக படுகிற பிரயாசம் ஒவ்வொரு நாளும் அதிகரிக்க வேண்டுமே ஒழிய குறையக் கூடாது.

இப்படியாக உண்மையான பிரயாசத்தோடு செய்யும் ஊழியமே ஆண்டவரால் எத்தன்னையுள்ளதென்று பரிசோதிக்கபடும் பொழுது நிலைநிற்கும், **“ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்.“** (1 **கொ** 3:12-15). மற்றபடி, பாரமில்லாமல் எவ்வளவு பெரிய காரியத்தை / ஊழியத்தை தேவனுக்கு செய்தாலும் அதனால பலன் ஒன்றுமில்லை, எல்லாம் அக்கினியால வெந்து அழிந்துபோம். தாலந்துகள் பற்றிய உவமையில், தான் பெற்ற தாலந்தை

பிரயாசத்தோடு பயன்படுத்தி பெருக செய்தவனையே ஆண்டவர் மெச்சி கொள்கிறார். அவனுக்கு இன்னும் பிற தாலந்துகளையும் கொடுக்கிறார். ஆனால் பிரயாசப்பட விரும்பாத மனுஷனையோ கடிந்து கொண்டு, அவனிடம் உள்ள தாலந்துகளை தேவன் எடுத்து போடுகிறார் **(மத் 25:14-30)**. இது நமக்கு மிகவும் எச்சரிப்பான ஒரு காரியமாகும்.

ஆனால், கவலைதரும் விதமாக இன்று உலகமெங்கிலும் செய்யப்படும் தேவ ஊழியங்கள் பல, தேவனுக்காக பிரயாசப்படுவதை விட சுய லாபங்களுக்காக, சுய பெருமைக்காக செயல்படுகின்றன. திரளான மக்கள் மத்தியில் ஊழியம் நடைபெற்றாலும், அங்கு தேவ ஊழியத்தின் மூலம் தங்கள் சுய ராஜ்யத்தை கட்டவே பலர் பிரயாசப்படுகின்றனர். இதுவே ஊழியங்களும், சபைகளும் பெருகியும் தேசத்தில் ஒரு மாற்றம் / எழுப்புதல் இல்லாமல் இருப்பதற்கு காரணமாகும். ஆனால் சரித்திரத்தில் தேவனுக்கு வல்லமையாய் ஊழியம் செய்த தேவபிள்ளைகள் பலர், தங்களுக்குரிய எல்லாவற்றையும் விட்டு, மொழி புரியாத, பல எதிர்ப்புகளும், இன்னல்களும், அசௌரியங்களும் நிறைந்த இடங்களுக்கு சென்று மொழியை கற்று, மக்களோடு மக்களாக பழகி, பலவித துன்பங்கள், இழப்புகளையும் சகித்து, மிகுந்த பிரயாசத்தோடு ஊழியம் செய்துள்ளனர்.

இப்படிபட்டவர்களாலேயே இந்தியா போன்ற ஆசிய நாடுகளிலும், ஆப்பிரிக்க கண்டத்திலும் சுவிசேஷம் பரவியது. டேவிட் லிவிங்ஸ்டன், சாது சுந்தர் சிங், சீகன் பால் போன்ற எண்ணற்ற தேவ ஊழியர்கள் பட்ட பிரயாசங்கள் நம்மை மெய்சிலிர்க்க செய்யும். பவுலை போல இவர்களும் பாடுகள், எதிர்ப்புகள், வியாதிகள், இழப்புகள் என்று எல்லாவற்றையும் சந்தித்தே ஊழியம் செய்தனர். அதனால் உண்டான பலனை நாம் இன்று கண்கூடாக கண்டுகொண்டிருக்கிறோம். உதாரணமாக ஒன்றை கூற வேண்டுமானால், பல தேவ பிள்ளைகள் மிகுந்த பிரயாசத்தோடு, வேதாகம மொழிபெயர்ப்பு பணியில் ஈடுபட்டு, இரவும் பகலும் உழைத்ததினாலேயே இன்று நமது மொழியில் வேதாகமம், நம் கையில் இருக்கிறது. இவர்கள் இப்படி பிரயாசப்படாதிருந்தால் கோடிக்கணக்கான மக்களின் நிலை என்னவாக இருந்திருக்கும், சற்று சிந்தித்து பாருங்கள். மகத்தான ஊழியத்தை செய்த இவர்கள் யாவரும், தங்களை மறைத்து தேவ நாமம் மகிமைபட வேண்டும், வேத வசனம் எவ்விடமும் செல்ல வேண்டும் என்றே பிரயாசப்பட்டனர்.

ஆனால் இன்றோ இதற்கு மாறாக, தேவனுக்காக ஏதோ ஒரு சிறிய காரியத்தை செய்துவிட்டு, அதன்மூலம் தங்களை வல்லமையுள்ள மனிதர்களாக பலர் காண்பிக்கின்றர். இப்படிப்பட்டவைகள் அக்கினியால்

சோதிக்கப்படும் பொழுது ஒன்றுமில்லாமல் வெந்துபோம். மேலும் **"பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்."** என்று **2 தீமோ 2:6** கூறுகிறது. ஆம் உண்மையான பிரயாசத்தோடு தேவனுக்காக வாழ்கிறவர்களுக்கே தேவன் முதற் பலனான ஆசிர்வாதத்தை தருவார். **"ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே." (எபி 6:10)**. எனவே ஆண்டவருக்காக உண்மையான பிரயாசத்தோடு வாழ்வோம், நிறைவான பலனை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக் கொள்வோம். **"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது." (வெளி 22:12)**, **"ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்." (வெளி 22:20)**, அல்லேலூயா.